**மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்கும் - 2022**

-----------------------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் ஆணைக்குழு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழு உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது

தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது ஆணைக்குழுவின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் 7 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் மேல் மாகாணத்திற்காக தொழிற் கல்விப் பயிற்சித் திட்டம் (VET Plan) தயாரிப்பதற்காக மீளாய்வாண்டின் போது | 2023 ஆம் ஆண்டின் போது அந்த அட்டுறு செலவினத்திற்காக செலுத்தப்பட்ட பெறுமதி அட்டுறு கணக்கின் மூலம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிறைவேற்றப்படாத பணிகளுக்காக அட்டுறு செலவினங்களுக்காக ஒதுக்கீடுகள் செய்ய முடியாது. |

| | | | |
|---|---|---|---|
| | திறைசேரியிலிருந்து கிடைத்த மூலதன மானியங்களில் ரூபா 1,468,795 தொகை உரிய பணிகளை நிறைவேற்றாமல் அட்டுறு செலவனத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் மிகை மற்றும் அட்டுறு செலவினம் அப்பெறுமானத்தால் முறைறே குறைத்தும், அதிகரித்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | மிகுதி ரூபா 712,814 பெறுமதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யும் போது அந்த சொத்துக்களுக்குரிய வகுப்பிற்குரிய சகல சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவிற்குரிய மோட்டார் வாகனங்களை மீள்மதிப்பீடு செய்யும் போது ஒரு கெப் வண்டி மீள்மதிப்பீட்டிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. எனினும் அந்த கெப் வண்டியின் ரூபா 1,750,000 ஆன கிரயம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் அதற்குரிய ரூபா 1,726,610 திரண்ட பெறுமானத் தேய்வாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இலக்கம் 57-7603 என்ற கெப் வண்டியை பழுதுபார்க்கும் வகையில் பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்டமையால் மீள்மதிப்பீட்டிற்காக உட்படுத்த முடியாதிருந்த போதும் அந்த வண்டியை பழுதுபார்த்து உடனடியாக மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 52 ஆம் பந்தியின் பிரகாரம் மீள் மதிப்பீட்டின் விளைவாக சொத்துக்கள் வகுப்பின் நியாயமான இழிவுப் பெறுமதி அதிகரிக்கின்ற போது அந்த அதிரிப்பு நேரடியாக மீள் மதிப்பீட்டு மிகையில் செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவின் சொத்துக்களை மீள் மதிப்பீடு | மீள்மதிப்பீட்டிற்குரிய மீள்மதிப்பீட்டு மிகை பிற்போட்ட வருமானக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டு தனியாக காண்பிப்பதற்காக உரிய நாட்குறிப்புக்கள் 2023 இன் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மீள்மதிப்பீட்டு மிகை அல்லது பற்றாக்குறை கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யும் போது 07 சொத்து வகுப்புக்களுக்குரிய ரூபா 90,383,696 ஆன மீள்மதிப்பீட்டு மிகை மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கில் செலவு வைப்பதற்கு பதிலாக பிற்போட்ட வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த நியமத்தின் 53 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு சொத்தொன்றின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி குறைவடைதல் அந்த ஆண்டின் மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காண வேண்டியிருந்த போதிலும் கணனி மற்றும் துணைப் பாகங்கள் சொத்து வகுப்பிற்குரியதாக இனங்காணப்பட்ட ரூபா 171,453 ஆன மீள்மதிப்பீட்டு இலாபம் நடப்பாண்டின் மிகையில் சீராக்குவதற்குப் பதிலாக ஏனைய சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு மிகையில் ஈடுசெய்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09 இன் பிரகாரம் ஆணைக்குழுவினால் நிதி அறிக்கை இடுகின்ற திகதியில் காணப்பட்ட சகல இருப்பு விடயங்களினதும் கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதியில் குறைந்த பெறுமதிக்கு அளவிட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 10,843,810 ஆன சான்றிதழ் பத்திரம் மற்றும் விண்ணப்பதார்களுக்காக வழங்கப்படுகின்ற மேலங்கிகள் (Assessor Overcoat) இறுதி இருப்பு கணிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக அவ்வாண்டின் | சான்றிதழ் பத்திரங்களில் எஞ்சிய இருப்புக்களை கணக்குகளில் சீராக்குதல் 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படும். | சகல இறுதி இருப்புக்களையும் கணக்கீடு செய்ய வேண்டியிருந்ததுடன் அந்த இருப்புக்களை அளவிடும் போது ஈடுபடுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருப்பு மற்றும் மிகை அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மிகுதி இருப்பை அளவிடும் போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | | |
| (உ) | மீளாய்வாண்டின் கிடைக்கப்பெற்ற அரச மூலதன மானியம் ரூபா 2,587,278 மற்றும் ஏனைய மூலதனமாகிய ரூபா 1,382,798 தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்றின் பிரகாரம் மூலதன மானியம் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் தனியாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க மூலதன மானியங்களை இனங்கண்டு உரிய பிரகாரம் கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 04 வெளி நிறுவனங்களுக்காக சான்றிதழ் பத்திரங்களை விநியோகித்தற்காக ரூபா 34,418,355 வருமானம் கிடைக்க வேண்டியிருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 9,348,689 ஆக காண்பிக்கப்பட்டமையால் ஆண்டின் வருமானம் மற்றும் பெறவேண்டிய வருமானம் என்பன ரூபா 25,069,666 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கீடு செய்வதற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்த பட்டியல்களை மீண்டும் பரீட்சித்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ஆண்டிற்குரிய வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டின் அட்டுறு செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட அச்சிடல் செலவினத்திற்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 3,082,418 தொகை ஆண்டின் செலவினமொன்றாக கணக்கீடு | இந்த செலவினங்கள் 2023 ஆம் ஆண்டுகளில் சீராக்குவதன் மூலம் சரிசெய்யப்படும். | ஆண்டின் மிகை / பற்றாக்குறை சரியாக கணிப்பிடுவதற்காக சொத்துக்குரிய செலவினங்கள் மாத்திரம் உரித்தாக்கிக் |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை மற்றும் அட்டுறு செலவினம் அப் பெறுமானத்தால் குறைத்தும் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | கொள்ளப்படல் வேண்டும். |

**1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| வருமான தொகுதி 07 | 22,279,725 | 60,640,900 | 38,361,175 | மதிப்பீட்டுக் குழுவின் மூலம் கிடைக்க வேண்டியவைகளை உறுதிப்படுத்தி பட்டியல்களின் பெறுமதி மாத்திரம் வருமானத்தில் கணக்கீடு செய்யப்படும். | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

**1.5.4 இனங்காணப்பட்ட வேறுபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை ரூபா 12,343,157 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்களில் செலுத்தவேண்டியதாக ரூபா 2,018,589 மாத்திரமே காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 10,324,568 இனங்காணப்படாத வேறுபாடு காணப்பட்டது. | அச்சகத் திணைக்களத்திற்கு செலுத்தவேண்டிய உள்ளபடியான தொகையை பரீட்சித்து 2023 ஆம் ஆண்டின் போது கணக்குகளில் உள்ளடக்கப்படும். | வெளிநிறுவனங்களுக்காக செலுத்த வேண்டிய பணத்திற்காக சரியான பதிவேடுகளைப் பேணிச் செல்லல் மற்றும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

**1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை.**

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 09 வருமான தொகுதிகள் | 40,898,093 | அறவிடப்படுகின்ற வருமானம், அறவிடப்பட்ட வருமானத்தை நிர்ணயித்தல் மற்றும் இணங்காண்பதற்குரிய அங்கீகாரம் | வருமானம் உழைப்பதற்கு பெறப்பட்ட அங்கீகாரத்தின் மூலாதாரம் தொடர்பாக மேலும் பரீட்சித்து சரியான தகவல்கள் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட வருமான உறுதிப்படுத்தல்களுக்கு தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | NVQ சான்றிதழ் பத்திரம் அச்சிடும் செலவினம் | 6,537,091 | 2022 ஆம் ஆண்டின் போது செலவினமாக உறுதிப்படுத்துவதற்கான விலைப்பட்டியல் | 2022 ஆம் ஆண்டிற்காக தரப் பாதுகப்பு மதிப்பீட்டு நிர்வாகப் பிரிவின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட தேசிய தொழிற்தகைமை சான்றிதழ்களை அச்சிடுவதற்கான உறுதிச்சீட்டுக் களுக்காக காணப்பட்ட நிதியேற்பாடுகளின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. உரிய அங்கீகாரத்தையுடைய கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் அதாவது தேசிய தொழிற்தகைமை நிகழ்சித் திட்டத்தின் கீழ் உரிய செலவினங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட செலவினங்களை உறுதிப்படுத்துவதற்கு தேவயான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | முற்பணம் | 4,207,767 | 2017 ஆம் ஆண்டின் போது செலுத்தி தீர்ப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட | 2017 ஆம் ஆண்டின் போது கணக்கீட்டுத் தொகுதி செயலிழந்ததுடன் உறுதிச்சீட்டுக்கள் | கணக்காய்விற்காக தேவையான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| உறுதிச் சீட்டுக்கள் மற்றும் பற்றுச் சீட்டுக்கள் | உரிய தொகுதிக்கு உள்ளடக்கும் போது தீர்ப்பதற்குரிய சில உறுதிச்சீட்டுக்கள் கைவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எடுத்தல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டிலிருந்து செலுத்த வேண்டிய ரூபா 1,880,445 ஆன கடன்கொடுத்தோர் மீதியொன்று மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் இது சரிசெய்யப்படும். | கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்த்து வைப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) மீளச்செலுத்த வேண்டிய குறுங்கால மானியம் (short term refundable grant) இல் உள்ளடக்கப்பட்டிருந்த 05 வருடங்களை விஞ்சிய ரூபா 1,192,339 கூட்டுத்தொகையான வைப்புக்களில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெளிநிறுவனத்திலிருந்து திறன் மதிப்பீட்டுக்காக பெறப்பட்டிருந்த நிதியத்தின் மூலம் செலவிடப்பட்ட பணத்தை இணங்கண்டு அந்தப் பெறுமதியை வருமானக் கணக்கில் மற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நீண்ட காலமாக மீளச் செலுத்த வேண்டிய வைப்பக்களை இணங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தியின் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 371(2) (ஆ) | ஏதாவது ஒரு விஷேட பணிகளுக்காக ஒரு சந்தர்ப்பத்தின் போது ரூபா 100,000 ஆகக் கூடிய அளவு வரை மாத்திரம் உபகட்டுநிதி வழங்க முடியுமாக இருந்த போதும் அதற்கு முரணாக 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,536,860 மற்றும் ரூபா 1,404,987 ஆக உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | நாட்டில் காணப்பட்ட கொரோனா நிலைமையின் காரணமாக மதிப்பீட்டுப் பிரிவின் பணிப்பாளரின் பெயரில் முற்பணம் பெறப்பட்டு பரீட்சை நிலையங்களின் கடமைகளுக்கு பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர்களின் கணக்குகளுக்கு குறித்துரைத்த எல்லைகளின் கீழ் பணம் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் நடவடிக்க எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 371(5) | எந்தவொரு உபகட்டுநிதியும் வழங்கப்பட்டதன் பின்னர் உரிய பணி முடிவடைந்தவுடன் அந்த உபகட்டுநிதி மீண்டும் தீர்க்கவேண்டியிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து கொண்டுவரப்படுகின்ற ஆணைக்குழுவின் 77 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி ரூபா 3,521,058 தொகை 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | உப கட்டுநிதியை விரைவாக தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 23,722,454 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,548,803 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 27,271,257 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது இந்த அதிகரிப்புக்கு தேசிய திறன் சான்றிதழுக்காக அறவிடப்பட்ட கட்டணம் அதிகரித்தமை மற்றும் அரசாங்கத்தின் மானியம் அதிகரித்தமை என்பன பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களில் முக்கிய பகுப்பாய்வு.

மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்கள், முன்னைய ஆண்டுடன் ஒப்பீடப்பட்டு பகுப்பாய்வு செய்து அதிகரிப்பு அல்லது குறைவு சதவீதமாக கீழே காண்பிக்கப்படுகிறது.

| | 2022<br>ரூபா | 2021<br>ரூபா | வேறுபாடு<br>சாதகம்/(பாதகம்) | சதவீதம்<br>(%) |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| திறைசேரி மானியம் | 157,629,961 | 135,709,694 | 21,920,267 | 16.15 |
| செயற்றிட்ட மானியம் | 8,955,724 | 18,978,335 | (10,022,611) | 52.81 |
| செயற்பாட்டு வருமானம் | 63,774,928 | 29,404,202 | 34,370,726 | 116.89 |
| செயற்பாடல்லாத வருமானம் | 3,954,929 | 90,824 | 3,864,105 | 4254.49 |
| **செலவினம்** | | | | |
| வழங்கல் மற்றும் சேவைச் செலவினம் | 15,209,606 | 11,041,272 | (4,168,333) | 37.75 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினம் | 104,295,593 | 83,985,662 | (20,309,931) | 24.18 |
| செயற்திட்ட செலவினம் | 8,955,724 | 18,978,335 | 10,022,611 | 52.81 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (ஆ) | 2017 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டுவரை 371 நிறுவனங்கள் பதிவினை புதுபிப்பதற்காக கோரப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதி வரையிலும் அந்த நிறுவனங்களின் பதிவு புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | புதுப்பிப்பதற்காக விண்ணப்பங்கள் கிடைத்த பின்னர் அந்த நிறுவனங்களுக்குச் சென்று மதிப்பீடு செய்யப்படுகின்றது. அந்த மதிப்பீட்டடின் போது உரிய கருதுகோல்கள் பூர்த்தி செய்யப்படாத நிறுவனங்களின் பதிவு புதுப்பிக்கப்படுவது இல்லை. | சட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பிரகாரம் பதிவினை புதுப்பிப்பதற்கோ அல்லது பரிசோதனையின் பின்னர் ஏனைய நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்துமாறு அந்த நிறுவனங்களின் பதிவினை இரத்துச் செய்வதற்கோ விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பதிவு காலாவதியாகிய நிறுவனங்களை மீண்டும் பதிவு செய்வதற்கும், அந்த நிறுவனங்களை புதுப்பிக்காமல் தொழிற்பயிற்சி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றமையை ஒழுங்குமுறையாக பரீட்சிப்பதற்காகவும் வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்காமையின் காரணமாக தொழிற்பயிற்சி நிறுவனம் தொடர்பாக ஆணைக்குழுவினால் நிறைவேற்ற வேண்டிய ஒழுங்குபடுத்தல்கள் உரிய | பதிவினை புதுப்பிக்காமல் உளள அனேகமான நிறுவனங்கள் தற்போது மூடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. பதிவினைப் பெறாமல் நடாத்திச் செல்லப்படுகின்ற நிறுவனங்கள் மூலம் | தொழிற்பயிற்சி நிறுவனம் தொடர்பாக ஆணைக்குழுவிலிருந்து நிறைவேற்றவேண்டிய ஒழுங்குபடுத்தல்கள் உரிய பிரகாரம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | Face book இல் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்களில் எதிராக (Counter Advertisement) அறிவித்தல் இந்த ஆணைக்குழுவினால் பிரசுரிக்கப்பட்டுள்ளது. | |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையில் 06 கட்டங்களில் பாடநெறிகளுக்காக 03 சந்தர்ப்பங்களில் 2500 சான்றிதழ் பத்திரங்கள் அச்சிடப்பட்டிருந்த போதும் கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் அதில் 99 சதவீதம் அதாவது ரூபா 295,923 பெறுமதியான 2482 சான்றிதழ் பத்திரங்கள் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது. | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் 06 ஆவது மட்டத்தின் பாடநெறிக்கான சான்றிதழ் பத்திரங்களின் இருப்பு 2500 மூன்று சந்தர்ப்பங்களின் போது கட்டளையிடப்பட்டிருந்தது. | தேவையினை சரியான பிரகாரம் இனங்கண்டு சான்றிதழ் பத்திரங்களை அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மூன்றும் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்காக மேலங்கிகள் (Overcoats) வழங்குவதற்கு 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 3,888,000 பெறுமதியுடைய 2000 மேலங்கிகள் (Overcoats) இலங்கை சலுசல நிறுவனத்தில் இருந்து கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு அதில் 1084 மேலங்கிகள் (Overcoats) கொள்வனவு செய்யப்பட்ட அளவில் 54 சதவீதம் பகிர்ந்தளிக்கப்படாமல் எஞ்சியிருந்ததுடன் அந்த மேலங்கிகளை பகிர்ந்தளிப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்று தீர்மானிக்கப்படாமல் கொள்வனவு செய்யப்பட்டமையால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. | 2023.03.31 ஆம் திகதி வரையில் பயிற்சி பெற்ற மதிப்பீட்டாளர்கள் 180 பேர்கள் இருந்தமையால் அவர்களுக்காக எஞ்சிய Overcoats வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் எதிர்காலத்தில் மதிப்பீட்டாளர்களின் எண்ணிக்கை தொடர்பாக 10 நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதன் போது உரிய Overcoats உரிய கட்டணங்களை அறவிட்டதன் பின்னர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையினை சரியாக இனங்கண்டு தேவையான கொள்வனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2016 பெப்ரவரி 26 ஆம் திகதிய இலக்கம் MSDVT/SSDP/2016-1 என்ற திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சின் சுற்றறிக்கையின் படி தொழிற் பயிற்சி நிறவனத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற சேவைகளை மிகவும் தரமாகவும் உயர் தரத்திலும் அமுல்படுத்தும் நோக்கில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட தர முகாமைத்துவ முறைமை அல்லது இலங்கை நியமங்கள் நிறுவனத்தில் காணப்படுகின்ற ISO 9001:2008/2015 தர முகாமைத்துவ முறைமை தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் ஸ்தாபித்தல் கட்டாயமாக்கப்பட்டிருந்தது. எனினும் இது தொடர்பாக உரிய நிறுவனத்திற்கு அறிவித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக ஆணைக்குழுவால் 2019 ஆம் ஆண்டின் பின்னர் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த காலப் பகுதியில் நாட்டில் காணப்பட்ட பொருளாதார பின்னடைவில் அநேகமான நிறுவனங்களில் தர முகாமைத்துவத்தை மேற்கொள்வதற்கு முடியாத நிலைமை உருவாகி இருந்தது. எனினும் காணப்படுகின்ற நிறுவனங்களின் தர முகாமைத்துவத்தை அமுல்படுத்திச் செல்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | ஒழுங்குபடுத்தல் நிறுவனமாக ஆணைக்குழுவின் பொறுப்புக்களை நிறைவேற்றும் வகையில் அமுல்படுத்தல் வேண்டும். |